# அசம்பாவிதங்களைத் தவிர்க்க நிலத்தடி பயன்பாடுகளை வரை படமாக்குவதில் தீவிரம் காட்டுவீர்



கோலாலம்பூர், ஆக, 25-

ஒரு பகுதியில் குறிப்பாக, மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்போது, தேவையற்ற சம்பவங்களைத் தவிர்க்க நிலத்தடி பயன்பாடுகளை வரைபடமாக்குவதில், கோலாலம்பூர் மாநகராண்மைக் கழகம், டிபிகேல், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் பயன்பாட்டு சேவை நிறுவனங்கள் இணைந்து ஒத்துழைக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றன.

நிலத்தடி நிலைமையைப் கண்காணிக்க, பயன்பாட்டு வரைபடம் முக்கியமானது என்று தொடர்பு அமைச்சர், ஃபஹ்மி ஃபட்சில் தெரிவித்தார்.

நிலத்தடியில் பெரும்பாலான நீர்க் குழாய்கள், மின்சாரக் கம்பி வடங்கள் பொருத்தப்பட்டிருந்தாலும், சில வேளைகளில் அதன் பயன்பாட்டு வரைபடம் செயல்படுவதில்லை என்றுவர் சுட்டிக் காட்டினார். பயன்பாட்டு சேவையின் வரைபடத்தை உருவாக்கும் பொறுப்பு, கோலாலம்பூர் மேயர் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனாவிடம் ஒப்படைக்கப்படுவதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் அம்முயற்சிக்கு முழு ஒத்துழைப்பை வாங்குவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில், ஒரு பகுதியில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்போது, எனக்கு அதிகமான புகார்கள் கிடைத்துள்ளன. மண்ணைத் தோண்டும்போது, டி.என்.பியின் பெரிய மின்சாரக் கம்பி வடங்கள் இருக்கும். உதாரணத்திற்கு, அவை வரைபடத்தில் இல்லை. ஆகவே, நெருக்கமான ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. டி.பி.கே.எல் மட்டும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மட்டுமின்றி, பயன்பாட்டு விவகாரங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார் அவர். கோலாலம்பூரில், நேற்று கொத்தோங் ரோயோங் மெகா மெர்டேக்கா திட்டத்தை தொடக்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் ஃபஹ்மி அவ்வாறு கூறினார்.